
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**964**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**29**

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

## கழகத்தின் தூணாக நின்ற துணை!

தி.மு.க. வரலாற்றில், இளைய தலைமுறை அறிந்துகொள்ள வேண்டிய ஆயிரமாயிரம் முன்னோடிகளில் மிகவும் தனித்துவமான தலைவர் சாதிக் பாட்சா. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என மூவரோடும் அன்பைப் பகிர்ந்தவர். மூவரிடமிருந்தும் அரசியல் பயின்றவர்.

உடுமலைப்பேட்டையில் 1928-ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் தேதி, பிறந்தார். இளம் வயதிலேயே திராவிட இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, அரசியல்மயப்பட்டார். சட்டம் படித்து வழக்கறிஞரும் ஆனார். தனது 30-வது வயதிலேயே தீவிர கழகப் பணியாற்றத் தொடங்கிவிட்ட சாதிக் பாட்சாவை, 1962-ஆம் ஆண்டு சென்னை கோடம்பாக்கத்தில் நடைபெற்ற தி.மு.கழக நான்காவது மாவட்ட மாநாட்டிற்குத் தலைமையேற்கச் செய்தார் அண்ணா. அதே ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டக் களத்தில், உடுமலையில் பங்கேற்று, 3 மாதம் சிறைத்தண்டனை அனுபவித்தவர், சாதிக் பாட்சா. வால்பாறையிலும், உடுமலைப்பேட்டையிலும் தொழிலாளர் சங்கங்களை உருவாக்கினார்.

1967-ஆம் ஆண்டு, சாதிக் பாட்சாவின் களப்பணியை அங்கீகரிக்கும் விதமாக, உடுமலைப்பேட்டையில் போட்டியிடும் வாய்ப்பை வழங்கினார் அண்ணா. 9 பேர் கொண்ட அமைச்சரவையிலும் இடம் அளித்தார் அண்ணா. அதுவும், சுகாதாரத் துறையைத் தந்தார்.

கல்வி- பொருளாதார- வாழ்வியல் ஏற்றம் - சமநிலையை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பமும் பேண விதை ஊன்றிய முக்கிய நடவடிக்கை குடும்பக் கட்டுப்பாடு திட்டம் என்று பொருளாதார அறிஞர்கள் பலரும் குறிப்பிடுகின்றனர். அதற்கான விதையை ஊன்ற, தான் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த காலத்திலேயே முயற்சி மேற்கொண்டவர், சாதிக் பாட்சா. “தமிழகத்தில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கு அமோக ஆதரவு இருக்கிறது. இதனால் கெடுதலில்லை என்பதை மக்கள் புரிந்துகொண்டனர். நீண்டநாட்களாகப் பெரியாரின் இயக்கம் செய்த பிரச்சாரமும் உதவியாக இருக்கிறது” என்று சாதிக் பாட்சா குறிப்பிட்டிருப்பது, கவிஞர் கருணானந்தம் எழுதிய, ‘தந்தை பெரியார் - முழுமுதல் வரலாறு’ நூலில் இடம்பெற்றுள்ளது.

ஆட்சி அமைத்தவுடன், தனது சகாக்களுடன் சென்று பெரியாரை சந்தித்துவிட்டு வந்த அண்ணா, ‘இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை’ என்றும் சட்டமன்றத்தில் கூறினார். 18 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு அண்ணா மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட தலைவர்களும் பெரியாருடன் தங்கள் நட்புறவைப் புதுப்பித்துக்கொண்டனர். அதில், சுகாதார அமைச்சராக இருந்த சாதிக் பாட்சாவும் குறிப்பிடத்தக்கவர்.

அந்த ஆண்டு, குடலிறக்கப் பிரச்னை காரணமாக, பெரியார் சென்னை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போது, முதலமைச்சர் அண்ணா உட்பட, பெரியாரை சந்தித்த பலரது பெயர்ப் பட்டியல் ‘விடுதலை’யில் வந்துகொண்டே இருந்தது. அப்போது, சுகாதாரத்துறை அமைச்சர் என்ற முறையில், அனைவருக்கும் முன்பே சென்று சந்தித்தவர் சாதிக் பாட்சா. அமைச்சரான பின்னர்தான், 22.08.68-இல் சாதிக் பாட்சா திருமணம் செய்துகொண்டார். சென்னையில் நடைபெற்ற இந்தத் திருமணத்திற்கு வள்ளியூரில் இருந்து வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார் தந்தை பெரியார்.

அதேபோல 1969-ஆம் ஆண்டு, பெரியாரின் 91-வது பிறந்தநாளை ஒட்டி, திருச்சியில்



சுயமரியாதைக் குடும்பங்களின் விருந்து, கருத்தரங்கு, பாராட்டுவிழாவாக நடைபெற்றது. அந்த விழாவில் அமைச்சர்கள் மதியழகன், ஓ.பி.இராமன் ஆகியோருடன் சாதிக் பாட்சாவும் கலந்துகொண்டார்.

### கண்டிப்பான பொருளாளர்

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர், சாதிக் பாட்சாவைப் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆக்கினார். கழகத்தின் தலைமை நிலையமாக இருந்த அன்பகத்தின் தலைமை அலுவலகப் பொறுப்பாளராகத் திறம்படச் செயலாற்றி, கலைஞருக்குப் பக்கபலமாகவும் திகழ்ந்தவர் சாதிக் பாட்சா. கழகத்தின் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். விலகி, அ.தி.மு.க.வையும், பொதுச்செயலாளராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் ‘மக்கள் தி.மு.க’வையும் தொடங்கியிருந்த சமயம், இருபெரும் பொறுப்புகளுக்கு, பொறுப்புள்ளவர்களை உயர்த்தவேண்டிய சூழலில் இருந்தார் கலைஞர்.

அடுத்த பொதுச்செயலாளர் பேராசிரியர் என்று எல்லோராலும் அப்போது ஊகிக்க முடிந்தது. ஆனால், பொருளாளர் யார் என்பதுதான் புதிராக இருந்தது. அந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில்தான், 1977-ஆம் ஆண்டு மே 15-ஆம் தேதி மதுரையில் கழகத்தின் சிறப்பு மாநாடு கூடியது. அப்போது, செல்லூர் நந்தவனம் பகுதியில் கூடிய பொதுக்குழுவில் கழகத்தின் பொதுச்செயலாளராக பேராசிரியர் அவர்களும், கழகத்தின் பொருளாளராக சாதிக் பாட்சா அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து 1982, 1986, 1992 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தலைமைக் கழகத் தேர்தல்களிலும் கழகத்தின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 17 ஆண்டுகள் பணியாற்றினார்.

> “அடக்குமுறைகள், சிறைவாசங்கள், அவதூறுக் கணைகள்; அம்புகளாக, அடுக்கடுக்காகப் பாய்ந்திட்டபோதும்; அவர் அலறித் தவித்ததில்லை;”

கழகம் நெருக்கடிக்கு உள்ளான தருவாயில் எல்லாம் முன்கள கழக வீரராக உறுதியோடு நின்றவர், சாதிக் பாட்சா. 1986-ஆம் ஆண்டில் ‘இந்தி வாரம்’ கடைப்பிடிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசு சுற்றறிக்கை அனுப்பியது. அதை எதிர்த்துப் போராடிய கலைஞர், பேராசிரியர் கைதாகினர். அப்போது, கழகத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்க கலைஞரால் நியமிக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் தலைவராகச் செயல்பட்டவர் சாதிக் பாட்சா.

1984-ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று, அ.தி.மு.க. மீண்டும் வெற்றிபெற்றிருந்த போதிலும், 10.02.1985-இல் தான் எம்.ஜி.ஆர். முதல்வராகப் பொறுப்பேற்றார். பதவியேற்றது முதல் எம்.ஜி.ஆருக்கு துறைகள் எதுவும் ஒதுக்கப்படாமல் இருந்தது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று அப்போது உயர் நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டியவர், கழகப் பொருளாளராக இருந்த சாதிக் பாட்சா.

### சட்டத்துறை அமைச்சர்

13 ஆண்டுகளுக்குப் பிறகு 1989-ஆம் ஆண்டில் மீண்டும் தி.மு.க. ஆட்சியமைத்தபோது, சட்டத்துறையை சாதிக் பாட்சாவிற்கு வழங்கினார், கலைஞர். அந்த காலகட்டத்தில் தான், பெண்களுக்குச் சொத்துரிமை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு 20% இடஒதுக்கீடு சட்டங்கள் உருவாகின.

கண்டிப்பான பொருளாளராகக் கழகத்தை வழிநடத்திய சாதிக் பாட்சா, 1994-ஆம் ஆண்டு மே 12-ஆம் தேதி காலமானார். காலமானார் என்பதைவிட கழகத்தின் கலங்கரைவிளக்கமானார் என்பதே, கலைஞரின் இரங்கல் கடிதம் உணர்த்திய குறிப்பு.

“வேதனைகள் வெள்ளமாகப் பெருகியபோது அவர் விலகி ஒதுங்கிட முனைந்ததில்லை! சோதனைச் சூறாவளிகள் பலமுறை சுழன்றடித்தபோதும்; அவர் சுகம் காண்பதற்குப் பிறிதோர் இடம் தேடியதில்லை! அடக்குமுறைகள், சிறைவாசங்கள், அவதூறுக் கணைகள்; அம்புகளாக, அடுக்கடுக்காகப் பாய்ந்திட்டபோதும்; அவர் அலறித் தவித்ததில்லை; ஆனந்த பவன்களின் அழைப்பை ஏறெடுத்தும் பார்த்ததில்லை! ஆட்சி கலைக்கப்பட்டு, பதவி பறிக்கப்பட்டபோதும்; ஆகாது இனி இந்த இடம்! என அடுத்த இடத்துக்கு மாறலாமா என நினைத்தும் பார்த்ததில்லை!

வந்து விடுக! என ஆள் அனுப்பி மிரட்டியபோதும்; மருத்துவமனையில் இருந்துகொண்டே உரத்த குரலில், வீணர்களை விரட்டியடித்தாரே தவிர; உடுமலைப்பேட்டைக் கூட்டத்தில் சிங்கமெனக் கர்ஜித்து, துரோகிகளைத் தோலுரித்துக் காட்டினாரே தவிர; துளியளவும் அவர்கட்குத் துணை நிற்க: மறந்தும் எண்ணினாரில்லை! ஆம்; அப்பழுக்கற்ற தங்கம்! கழகத்தில் ஜொலித்துக்கொண்டிருந்த வைரம்! கட்டுப்பாடு காப்பதில், கடமையாற்றுவதில், கண்ணியம் பேணுவதில்; கழகத் தலைமைக்கு உற்ற துணை!”

ஆம், சாதாரணத் துணை அல்ல, கழகம் துணையாக நின்ற சிறுபான்மைச் சமூகத்தில் இருந்து கழகத்திற்காக நின்ற பெருந்துணை; கழகத்திற்காக நின்ற பெரும் தூண்... சாதிக் பாட்சா!

...நீளும்

## பாரம்பரியக் கலைகள் பயிற்சிப் பட்டறை!



தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகமான, ‘தாட்கோ’ சார்பில், ‘ஆதி கலைக் கோல் -2025’ என்ற தலைப்பில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிச் சமூக இளைஞர்களுக்காகப் பாரம்பரியக் கலைகள் பயிற்சிப் பட்டறை, சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் செப்டம்பர் 23-ஆம் தேதி தொடங்கவுள்ளது.

இந்த 3 நாள் சிறப்புப் பயிற்சிப் பட்டறையில், நாட்டுப்புறக்கலை, நாடகக்கலை, இலக்கியக் கலை, காட்சிக் கலைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. துறை சார்ந்த வல்லுநர்களுடன் கலந்துரையாடல், கலைசார்ந்த களப்பயணங்கள் என பாரம்பரியக் கலைகளைக் கற்பதுடன் கொண்டாடவும், வழிவகுக்கும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்க விரும்பும் பட்டியல் மற்றும் பழங்குடிச் சமூக இளைஞர்கள், தாட்கோவின் இணையதளப் பக்கத்தில் முன்பதிவு செய்யலாம்.

3 நாட்கள் பயிற்சி, உணவு, தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகள் அனைத்தும் அரசு மூலம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினச் சமூக மக்களின் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வகையில், ‘ஆதி கலைக்கோல் கலை இலக்கிய சங்கமம்’ என்ற தலைப்பில், கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 40-க்கும் மேற்பட்ட கலைஞர்களின், 300-க்கும் அதிகமான புகைப்படங்கள்; 100-க்கும் மேற்பட்ட பழமையான ஓவியங்கள் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டன.

தொன்மையான இசைக் கருவிகள், ஆடை, ஆபரணம், நையாண்டி மேளம், ஆதிவாசி நடனம், துடுப்பாட்டம் உள்ளிட்ட, 30-க்கும் மேற்பட்ட மறைக்கப்பட்ட கலைகள் மீட்கப்பட்டன. இந்த ஆண்டும் தொடர்கிறது அந்த முயற்சி!

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க முடியாத நேர்காணல்!



‘நைல்’ ஆ.ராஜா

2016-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது, பவானி தொகுதியில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்திருந்தேன். அதற்கான நேர்காணல் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இன்றைய கழகத் தலைவர்,பேராசிரியர், பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர் ஆகியோர் முன் அமர்ந்து, தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்தது என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வு.

– ‘நைல்’ ஆ.ராஜா, மாவட்டத் தலைவர், தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, ஈரோடு தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உயிரை விலை கொடுத்த இயக்கம்!

1962-ஆம் ஆண்டு கழகம் நடத்திய விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில், திருவில்லிபுத்தூரில் கலந்துகொண்ட கழக இளைஞர் பொற்செழியன் மதுரை மத்திய சிறையில் விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார். சிறையில் தரப்பட்ட மோசமான உணவால், குடல் பாதிப்பு ஏற்பட்டு, மதுரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனாலும், சிகிச்சை பலன் தராமல், 25.08.1962-இல் அவர் உயிரிழந்தார். இரண்டு நாட்கள் கழித்தே உடல் ஒப்படைக்கப்பட்டது. அந்த 23 வயது இளைஞருக்கு அப்போது ஒரு வயது குழந்தை இருந்தது. கழகத்தினர் திரளாகச் சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.